திருப்பூர் காதர்பேட்டை பனியன் பஜாரில் இரவில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் 50 பனியன் கடைகள் எரிந்து நாசமானது. சேதமதிப்பு 3 கோடி ரூபாய்க்கு இருக்கும் என்பதை அறிந்து செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் ஆகியோர் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டு பாதிக்கப்பட்ட வியாபாரிகளுக்கு ஆறுதல் கூறினர். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், மாநகராட்சி ஆணையாளர் பவன்குமார் ஜி.கிரியப்பனவர், திருப்பூர் சார் ஆட்சியர் ஸ்ருதன் ஜெய் நாராயணன், அனைத்து மாநகர கழகச் செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன், துணை மேயர் ரா.பாலசுப்ரமணியம் உள்பட பலர் உள்ளனர்.

கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை நடத்தும் பன்னோக்கு சிறப்பு மருத்துவ முகாமினை மன்னார்குடி அருகே ஆலங்கோட்டையில் தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா துவக்கி வைத்தார். மாவட்ட ஆட்சியர் சாருஸ்ரீ, மாவட்ட ஊராட்சி தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, அவைத்தலைவர் தன்ராஜ், ஒன்றிய செயலாளர் டி.எஸ். டி.முத்துவேல், மாவட்ட மருத்துவ இணை இயக்குனர்கள் செல்வ குமார், உமா மற்றும் அரசு அதிகாரிகள் உடன் பங்கேற்றனர்.

க.செல்வராஜ் - இல.பத்மநாபன் - ந.தினேஷ்குமார் முன்னிலையில்

திருப்பூர் மாநகராட்சிப் பகுதிகளில் ரூ.40.24 கோடி மதிப்பிலான திட்டப்பணிகள்!

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார்!

திருப்பூர், ஜூன் 25- தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் 23.06.2023 வெள்ளிக்கிழமை அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர், வடக்கு மாவட்டக் கழக செயலாளர் க.செல்வராஜ், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர், தெற்கு மாவட்டக் கழக செயலாளர் இல.பத்மநாபன், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் ஆகியோர் முன்னிலையில் திருப்பூர் மாநகராட்சி செவந்தாம்பாளையம் பகுதியில் ரூ.24.00 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு படுக்கையறைகள் மற்றும் சமையலறையுடன் கட்டப்பட்டுள்ள திருப்பூர் தெற்கு வட்டாட்சியர் குடியிருப்பு கட்டடத்தை திறந்து வைத்தும், திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்3 ல் மாநில நிதிக்குழு மான்யம் திட்டத்தின் கீழ் பாரதி நகர் 1,2,3,4,6வது வீதிகளில் தார் தளம் அமைக்கும் பணியினை துவக்கி வைத்தும், திருப்பூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலையானது 114 முழு நேர பொதுவிநியோகத்திட்ட அங்காடிகளை நடத்தி வருகிறது.

இந்நிலையில் K.செட்டிபாளையம் முழு நேர அங்காடியில் 1932 குடும்ப அட்டைகள் உள்ளது. இதில் K.செட்டிபாளையம் நியாயவிலைக் கடையிலிருந்து 900 குடும்ப அட்டைகளைப் பிரித்து பாரதி நகர் பகுதியில் புதிதாக முழு நேர நியாயவிலைக்கடையை திறந்து வைத்தும், திருப்பூர் மாநகராட்சி மண்டலம்3, வார்டு60 கோவில்வழி பகுதியில் மாநகராட்சி உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.26.00 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட உள்ள புதிய பேருந்து நிலையத்தில் பல்வேறு தளங்களில் 42 பேருந்து நிறுத்தம், 35 கடைகள், 550 இருசக்கர வாகன நிறுத்துமிடம், 1 உணவகம், 1 தாய்மார்கள் பாலூட்டும் அறை, 3 மின்தூக்கிகள், கழிப்பிட வசதி, குடிநீர் வசதி, காவல் துறை மற்றும் அலுவலர்களுக்கான அறை, கண்காணிப்பு அறை மற்றும் தகவல் மையம் போன்ற வசதிகளுடன் அமைக்கப்படவுள்ள பணியினை தொடங்கி வைத்தும், திருப்பூர் மாநகராட்சி மண்டலம்4, வார்டு43, நடராஜ் தியேட்டர் அருகில் ரூ.14.00 கோடி மதிப்பீட்டில் நொய்யல் ஆற்றின் குறுக்கே பழைய உயர்மட்ட பாலம் அருகே உயர்மட்ட பாலம் 105 மீ நீளமும், 9.50 மீ அகலத்தில் அமைய பணியினை துவக்கி வைத்தும், 20 தெரு விளக்குகளுடன், நொய்யல் ஆற்றின் கரையோரம் இருபுறம் அமையும் புதிய சாலைகளுக்கு இணைப்பு பாலமாக புதிய பாலம் அமைத்து அகலப்படுத்தும் பணி என மொத்தம் ரூ.40.24 கோடி மதிப்பிலான திட்டப்பணிகளை துவக்கி வைத்தும், முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தார்

இந்நிகழ்ச்சியில் மாநகராட்சி ஆணையாளர் பவன்குமார் ஜி.கிரியப்பனவர், திருப்பூர் சார் ஆட்சியர் ஸ்ருதன் ஜெய் நாராயணன், திருப்பூர் தெற்கு மாநகர கழக செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன், துணை மேயர் ரா.பாலசுப்ரமணியம் உள்பட மாநில, மாவட்ட, மாநகர, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

நடிகர் போஸ் வெங்கட்டின்

சகோதரி - சகோதரர் மறைவு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜூன் 25-

நடிகர் போஸ் வெங்கட்டின் சகோதரி, சகோதரர் மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

கடந்த 2020ஆம் ஆண்டு சன் டிவியில் ஒளிபரப்பான மெட்டிஒலி சீரியல் மூலம் நடித்து பிரபலமானவர் நடிகர் போஸ் வெங்கட். அதனைத் தொடர்ந்து தனது யதார்த்த நடிப்பால் சினிமாவிலும் கால்தடம் பதித்து தனக்கென தனியிடத்தை பிடித்தார். அதன்படி, குணசித்திர நடிகர் மற்றும் வில்லன் கதாபாத்திரங்களில் சிறப்பாக நடித்து வருகிறார். மேலும், இவர் தமிழ் மட்டுமில்லாமல் மலையாளம் மற்றும் கன்னடம் ஆகிய மொழி திரைப் படங்களிலும் நடித்து வருகிறார்.

இவர் நடிகராக மட்டுமில்லாமல் கடந்த 2020ம் ஆண்டு வெளியான கன்னிமாடம் என்ற திரைப்படத்தையும் இயக்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் நடிகர் போஸ் வெங்கட் குடும்பத்தில் நேற்று முன்தினம் ஒரே நாளில் 2 உயிரிழப்புகள் ஏற்பட்டு பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

போஸ் வெங்கட்டின் சகோதரி வளர்மதி நேற்று முன்தினம் காலை மாரடைப்பால் உயிரிழந்தார். தகவல் அறிந்து, அவரது இறுதி சடங்கிற்கு போஸ் வெங்கட்டின் சகோதரர் ரங்கநாதன் அறந்தாங்கியில் இருந்து விரைந்து வந்து மறைந்த சகோதரியின் உடல்மீது சாய்ந்து கதறி அழுத நிலையில் அவருக்கும் திடீர் மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்தார்.

போஸ் வெங்கட்டின் மறைந்த சகோதரியின் உடல் நேற்று முன்தினம் சென்னையில் அடக்கம் செய்யப்பட்டது. அவரது சகோதரர் மறைந்த ரங்கநாதன் உடல் சொந்த ஊரான அறந்தாங்கிக்கு எடுத்து செல்லப்பட்டு நேற்று இறுதி சடங்குகள் நடைபெற்றன.

நடிகர் போஸ் வெங்கட்டின் சகோதரி மற்றும் சகோதரர் இருவரின் திடீர் மறைவு செய்தி அறிந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் போஸ் வெங்கட் மற்றும் மறைந்த குடும்பதாருக்கு தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.

29-ஆம் ஆண்டு நினைவு நாள்

முத்தமிழறிஞர் கலைஞரின் முன்னாள் ஆசிரியர்

திருவாரூர் க.சாம்பசிவம்

13.06.1911 - 26.06.1994

மகன்கள்

நங்கநல்லூர் எஸ்.வாஞ்சிநாதன் BA.,BL., வழக்கறிஞர்

கே.எஸ்.தியாகராஜன் B.Com.,

எஸ்.செந்தில் M.Com.,

சேலம் மாவட்ட திட்டக் குழு உறுப்பினர் பதவிக்கு கழக வேட்பாளர் ஆர். வி. சம்பத்குமார் போட்டியிட்டார் .வெற்றி பெற்றதைத் தொடர்ந்து மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கத்திடம் சம்பத்குமார் வெற்றி பெற்ற சான்றிதழை காண்பித்து வாழ்த்துப் பெற்றார். அருகில் ஆத்தூர் நகரச் செயலாளர் கே.பாலசுப்பிரமணியம், கவுன்சிலர்கள் குமார், ரிஸ்க் பாஸ்கரன், குமார், பர்கத் அலி, ஆடிட்டர் வேல்முருகன், சக்திகுமார், ரவி, மற்றும் நகர நிர்வாகிகள், கவுன்சிலர்கள் உடனிருந்தனர்.

புதுக்கோட்டை மாவட்ட

திட்டக் குழு உறுப்பினர் தேர்தலில் அ.தி.மு.க. படுதோல்வி!

தி.மு.க. சார்பில் போட்டியிட்ட 10 பேர் அமோக வெற்றி!

புதுக்கோட்டை, ஜூன் 25-

புதுக்கோட்டை மாவட்ட திட்டக்குழு உறுப்பினர்களைத் தேர்வு செய்வதற்காக புதுக்கோட்டை மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்களிடமிருந்து 10 பேரை மாவட்ட திட்டக்குழு உறுப்பினர்களாக தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் 23.6.2023 வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் மெர்சி ரம்யா மேற்பார்வையில் தேர்தல் நடத்தும் அலுவலர் கவிதா பிரியா தலைமையில் நடைபெற்றது. இதில் தி.மு.க. சார்பில் சாந்தி தங்கச்சிங்கம், ராஜேஸ்வரி செந்தில் குமார், த.செல்வம், நா.ஸ்டாலின், மு.க.இராமகிருஷ்ணன், கலைவாணி சுப்பிரமணியன், உஷா செல்வம், சரிதா மேகராஜன், பாக்கியலெட்சுமி கார்த்திகேயன், கே.இராமநாதன் ஆகியோரும் போட்டியிட்டனர். அ.தி.மு.க. சார்பில் இ.எஸ்.ராஜேந்திரன், ஆர்.சிவசாமி, எஸ். பாண்டியன் ஆகியோர் போட்டியிட்டனர். கழகத்தின் சார்பில் போட்டியிட்ட 10 பேரும் 15 வாக்குகள் பெற்று அமோக வெற்றி பெற்றனர். அ.தி.மு.க. சார்பில் போட்டியிட்ட 3 பேரும் 7 வாக்குகள் பெற்று தோல்வி அடைந்தனர்.

புதுக்கோட்டை நகர, பேரூராட்சி வார்டு சார்பில் மாவட்ட திட்டக்குழு உறுப்பினர்களாக தேர்ந்தெடுப்பதற்கு கழகத்தின் சார்பில் போட்டியிட்ட செந்தாமரை பாலு, புவனேஸ்வரி காளிதாஸ் ஆகியோர் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மக்களின் ஒருவிரல் புரட்சிக்கு முன்னால் மதப் பிரச்சாரம் எடுபடாது!

என் இனிய தமிழ்ச் சொந்தங்களே.....

எங்கள் வீர வரலாற்றின் இன்றைய கரிகாலன் எமது முத்துவேலர் கருணாநிதி ஸ்டாலின் என்பதிலே எவருக்குமே சந்தேகமில்லை. நாங்க திருப்பி அடிச்சா தாங்க மாட்டீங்கன்னு அவர் சொன்னது ஒரு உதாரணம் தான். ஒன்றிய அரசு என்ன உங்க பாட்டன் வீட்டு சொத்தா? சட்டங்கள் போட்டு ஜனநாயகத்தின் குரல்வளையை நீங்கள் நெரிப்பதும் ஆளுநர் அமலாக்கத்துறை, வருமானவரித்துறை, துணை ராணுவம் இவற்றையெல்லாம் வைத்துக்கொண்டு அமைச்சர்களை கைது செய்வதும் அனுமதி இன்றி தலைமைச் செயலகத்துக்குள் நுழைந்து அதிகார துஷ்பிரயோகம் செய்வதும் ஏற்புடையதா?

இதைப் பற்றி ஜ.நா. சபையிலே பேசிப் பார்க்கலாமா? அல்லது மேடை போட்டு இந்திய மக்களிடம் பேசலாமா? அமெரிக்க நாட்டுக்குள் நுழையக்கூடாது என அனுமதி மறுக்கப்பட்ட இந்திய மாநில முதல்வர் யார் என்பது மக்களுக்கு மறந்து விடும் என்று நினைக்கிறீர்களா? அல்லது அதே மாநிலத்து அமைச்சர் செய்த குற்றங்களையும் அதற்காக அடைந்த தண்டனையையும்நாம் மேடை போட்டு பேசலாமா?

வால்மீகி குணம் மாறி ராமாயணத்தை எழுதினார். அதை படித்த அந்த மாநிலத்தின் குற்றவாளிகள் ஒன்றிய பதவிகளுக்கு வந்த பின்னால் நாட்டை வேட்டைக்காடு ஆக்கி ஜனநாயகத்தைக் கொன்று மாநிலங்களை மடக்கிப் பிடித்து சன்மார்க்க அரசியலையும் சர்வாதிகார ஆட்சியையும் நிறுவ முயன்றால் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க வா நமது ஸ்டாலின் அவர்களை நமது மக்கள் முதல்வராக தேர்ந்தெடுத்தார்கள்?

ஒன்றிய ஆட்சியின் செயல்களை இந்த மாநில மக்கள் ஒப்புக் கொள்வதாக இருந்தால் நீங்கள் அமைத்த கூட்டணி அல்லவா மீண்டும் ஆட்சியைப் பிடித்திருக்க வேண்டும்? தோல்வியை ஒப்புக்கொள்ளும் வீரமற்ற நீங்கள் துரோகச் செயல்களை தொடர்ந்து செய்தால் அதனைத் தடுக்க திருப்பி அடிப்பது முதல்வர் என்ற பதவியின் கடமை.

மாநிலங்களின் பிரதிநிதிகள் தான் நீங்கள். வானத்திலிருந்து குதித்து வந்தவர்கள் அல்ல. நீங்கள் அடித்தால் நமது அமைச்சர் இருதய அறுவை சிகிச்சைக்குப் போவார். ஆனால் அனைத்து மாநில ஏழை இந்திய மக்களும் நமது முதல்வர் ஸ்டாலின் அவர்கள் சொன்னது போல திருப்பி அடிக்க ஆரம்பித்தால் உங்களுக்கு ஓடி ஒளியக் கூட இடம் கிடைக்காது. திமிறி எழ வேண்டிய ஏழை மக்களை கார்ப்பரேட்டுகளின் சுயநல அறக்கட்டளைகள் மூலம் அடக்கி வைக்க முயல்கிறீர்கள். மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு பதிலாக ஒன்றிய அரசை இந்தியாவின் ஒற்றை அதிகார மையமாக மாற்றுவதற்கு முயற்சி செய்கிறீர்கள்.

இந்த ஆபத்தான விளையாட்டில் பங்கேற்பதற்கு நமது முதல்வர் தயாரானவர் அல்ல. அவர் ஒளி வழங்கும் உதயசூரியன். பெரியாரின் பல்கலைக்கழகத்தில் பகுத்தறிவு பாடம் கற்றவர். அண்ணாவிடம் அரசியல் ஆயுதத்தை எப்படி பயன்படுத்த வேண்டும் என்பதனை கற்று முடித்த தளபதி. எதிரியை நோகாமல் அடித்து மடக்கும் கலையை கலைஞரிடம் கற்றவர். எல்லாவற்றிற்கும் மேலாக இத்தனை ஆண்டுகளாக இந்திய அரசியலை ஆட்டி வைத்த சன்மார்க்க சனாதன அரசியலுக்கு எதிர் திராவிட அரசியலே என்று தைரியமாக இந்திய மக்களிடம் பிரகடனப்படுத்திய திராவிட தலைவர்.

குட்ட குட்ட குனிகிறவன் முட்டாள். குனிய குனிய மேலும் மேலும் குட்டுகிறவன் அதைவிட அடி முட்டாள். இது யாரை நோக்கி சொல்லப்படுகிறது என்பது படிப்பவர்களுக்கு புரியும். கற்றுக் கொடுக்கும் இனம் எங்கள் இனம். எழுத்தறிவித்த இறைவன் கூட்டம் எமது கூட்டம். மனிதன் படைத்த அனைத்தையும் மாற்றி விட முடியும். ஆனால் தமிழன் படைத்த சிலவற்றை மாற்றவே முடியாது. திருக்குறளை மிஞ்சிய முப்பாலை சொல்லுகின்ற ஒரு நூலை காட்டுங்கள் பார்க்கலாம். வரப்புயர என்ற ஒற்றை வார்த்தையில் விவசாயத்தின் உச்சத்தை தொட்டுக் காட்டிய இன்னொரு படைப்பை கேட்டதுண்டா? திருமந்திரம் எங்கள் சைவ நெறி தந்திரம்.

நாட்டுக்குள் ஒரு நாட்டை படைத்த கூட்டம் எங்கள் திராவிட கூட்டம். விந்தியத்தை தாண்டி எப்போதுமே வரமுடியாத நீங்கள் மறந்திருக்க முடியாது. இமயத்திலே கொடி நாட்டிய எங்கள் செங்குட்டுவன் கொடி மட்டுமா நாட்டினான்? அந்த ஊர் மன்னர்களை கண்ணகிக்கு கோட்டம் அமைக்க கல் சுமக்க வைத்தவன் ஆயிற்றே.

நட்பை நாடுவதும், வந்தாரை வாழ வைப்பதும் நமது பண்பாடு. பிரித்து வைப்பதும், மதத்தை மையப்படுத்துவதும், ஆரியத்தை வளர்ப்பதும், பகுத்தறிவை சிதைப்பதும், சன்மார்க்க அரசியலை ஊக்குவித்து சமஸ்கிருதத்தை பரப்புவதும் உங்கள் பண்பாடு.

மக்களின் ஒரு விரல் புரட்சிக்கு முன்னால் மதப் பிரச்சாரமும், கார்ப்பரேட்டுகளின் வளர்ச்சியும் எடுபடாது என்பதை 2024 நாடாளுமன்றத் தேர்தலிலே நீங்களே புரிந்து கொள்வீர்கள். ஏனெனில் உங்களை திருப்பி அடிக்க நமது முதல்வர் மட்டுமல்ல; இந்திய மக்களே அவர் பின்னால் அணிவகுக்க ஆரம்பித்து விட்டார்கள்.

வி.செ.குகநாதன்
திரைப்பட இயக்குநர்

முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூறாவது பிறந்த நாளை முன்னிட்டு ஜெயம்கொண்டம் ஒன்றியம் உட்கோட்டை ஊராட்சியில் அமைந்துள்ள அரசு மேல்நிலைப்பள்ளி மற்றும் ஆயுதக்களம் வடக்கு அரசு நடுநிலைப்பள்ளி ஆகியவற்றுக்கு அரியலூர் மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு போக்குவரத்துத் துறை அமைச்சருமான சிவசங்கர் ஆலோசனைப் படியும் ஜெயம்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் கண்ணன் முன்னிலையிலும் முன்னாள் மாணவர் ஆயுதக்களம் ஆசைத் தம்பி ஏற்பாட்டில் குடியிருப்பு சுத்திகரிப்பு கலன் (RO WATER PURIFIER MACHINE) வழங்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை கலாநிதி வீராசாமி எம்.பி. வழங்கினார். இந்நிகழ்வில் ஜெயங்கொண்டம் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் மணிமாறன், உட்கோட்டை ஒன்றியக் குழு உறுப்பினரும் பெற்றோர் – ஆசிரியர் கழகத் தலைவருமான பிருத்திவிராஜன், உட்கோட்டை ஊராட்சி மன்றத் தலைவர், துணைத் தலைவர் மற்றும் மாவட்ட ஒன்றிய கிளை நிர்வாகிகள் உடன் இருந்தனர்.